# ரத்தொட்ட பிரதேச சபை
# மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூலை 18 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 04 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரத்தொட்ட பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) பல்லேவேரகம மற்றும் கய்காவல நீர் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 02 குளோரின் இயந்திரங்களின் பெறுமதியான ரூபா 130,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணத்திலிருந்து சமூக நீர் செயற்திட்டத்தின் பங்களிப்புப் பணமாக மத்திய மாகாண சபை கழித்துக் கொண்டு ரூபா 289,309 தொகை உரிய ஆண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்படாமல் சமூக நீர் செயற்திட்டத்திலிருந்து அறவிடவேண்டிய பணமாக கணக்கு வைக்கப்பட்டு முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) 15.25 பேர்சஸ் நில அளவினையுடைய வராஹேனவத்தை காணியின் பெறுமதியான ரூபா 200,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2013 யூன் 30 ஆந் திகதி வரையில் 17 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 60,303,514 ஆகும்.

(ஆ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 21,838,781 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,017,065 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,564,372 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(எ) 2006 ஆம் ஆண்டின் போது உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து உறுபினர்களுக்காக மோட்டார் சைக்கில்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட தொகையில் ரூபா 22,873 தொகையினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 1995 திசெம்பர் 27 ஆந் திகதிய 95/9 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதம செயலாளரின் கணக்குச் சுற்றுநிருபத்தின் 06 ஆம் பற்றியின் பிரகாரம் சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து 1998 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 15,571 தொகையான நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கோ அல்லது அல்லது பொருத்தமானவற்றைச் செய்வதற்கோ கணக்காய்வுத் திகதியான 2013 ஆகஸ்ட் 06 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சபைக்குரிய 07 வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது எரிபொருளுக்காக ரூபா 1,506,604 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) வாய்க்கல் வீதிக்கு கொங்கிரீட் தூண் நிர்மாணிக்கப்பட்டு ரீப் கட்டிடத்தின் தூண்களுக்கு அருகிலுள்ள வாய்க்கால் வீதியை உள்ளடக்கும் வகையில் 03 கடைகள் வாடகையாளரினால் அவர்களின் தனிப்பட்ட பணத்தில் நிர்மாணிக்கப்பட்டு வியாபாரங்கள் நடாத்தப்பட்டுக் கொண்டிருந்ததுடன் இந்த அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக சபையினால் எவ்வித சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2006 ஆம் ஆண்டில் சபைக்குக் கிடைத்த ரூபா 175,000 பெறுமதியான கொங்கிரீட் கலவை இயற்திரம் கட்டணம் அறவிடப்படாமல் முறையற்ற வகையில் தலைவர் மற்றும் நீர்க் கட்டுப்பாட்டாளரினால் தனிப்பட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த இயற்திரத்தை சபைக்கு வருமானம் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஈடுபடுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 219(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் எந்த உதவியாளருக்கோ அல்லது ஊழியருக்கோ பிரதேச சபையுடன் ஏற்படுத்தப்பட்ட அல்லது செயற்பாட்டை

ஈடுபடுத்துகின்ற ஏதாவது உடன்படிக்கை அல்லது வேலை தொடர்பாகவோ அல்லது நிதி சம்பந்தமாக இருந்த போதிலும் பிரதேச சபையில் மாற்று வழிகளிலோ வைக்க முடியாதிருந்த போதிலும் பிரதேச சபையில் சேவையாற்றுகின்ற இரண்டு உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்று உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்காக பிரதேச சபையின் தலைவருடன் சட்டரீதியான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒப்பந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 8,545,758 பெறுமதியான 12 ஒப்பந்தங்களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(க) 2012 யூலை 18 அந் திகதி சீபீஎச்டபிள்யூ - 4166 ஆம் இலக்க ரெக்ரர் சபையின் செயற்பாடுகளுக்குப் புறம்பான நடவடிக்கைகளுக்காக தலைவரினால் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் போது விபத்திற்குள்ளாகியமையினால் பழுதுபார்ப்பதற்காக தனியார் கராஜ் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டத்திற்குப் பொறுப்பானவர்களைத் தீர்மானிப்பதற்காக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2012 யூலை 26 ஆந் திகதி கொழும்பு பிரதேசத்தில் 03 நேரடியான கூறுவிலைகள் பெறப்பட்டு அந்த டெக்ரருக்காக அத்தினமே ரூபா 71,140 பெறுமதியான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. டெக்ரரை பழுதுபார்ப்பதற்காக உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பழுதுபார்த்தல் கட்டணமாக ரூபா 103,738 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மத்திய மாகாண பிரதம செயலாளரின் 2002 யூலை 25 ஆந் திகதிய சீபீசீ/சீஎஸ் /9/4/1/6/55 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பழுதுபார்த்தல் தொடர்பாக கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உரிய பழுதுபார்த்தல்கள் திருப்திகரமாகச் செய்யப்பட்டமைக்கு மோட்டார் போக்குவரத்து பரிசோதகரின் அறிக்கை பெறப்பட வேண்டியமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(கா) 2011 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 08 கடைகளை உள்ளடக்கிய நிகலொய வீதி வராந்த சந்தை அருகில் புதிய சந்தைத் தொகுதிக்கு அடுத்தாற் போல் 10 ¶ ¶ அளவான எஸ்பெஸ்டஸ் தகரம் போடப்பட்டு சுருங்கக்கூடிய அலுமினியம் கதவுடன் கடையொன்று வெளித்தரப்பினரால் அனுமதியற்ற முறையில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சபையினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. வாராந்த சந்தை வளவில் 30 ¶2[5 ¶நில அளவு பயன்படுத்தப்பட்டு கற்கள் உற்பத்தி செய்யும் வேலைத் தளமொன்றும் அனுமதியற்ற முறையில் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றமை

அவதானிக்கப்பட்டது. அவ்வாறே சபையின் அங்கீகாரமின்றி அந்தக் காணிக்கு அடுத்தாற்போல் 4 ¶x25 ¶ அளவில் பாதுகாப்புக் கட்டொன்று உரிய கொங்கிரீட் கல் செயற்திட்டத்தின் உரிமையாளரினால் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான காணியில் கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது உரிய முறையான திட்டமொன்று பின்பற்றப்பட்டு நிர்மாண மற்றும் வியாபாரங்களை நடாத்திச் செல்வதற்கு இடமளித்தல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்கூறப்பட்ட கடை மற்றும் நில அளவிற்காக ரூபா 1,500 படி வாடகை அறவிடும் திட்டமொன்று பின்பற்றப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமானக் கட்டுப்பாடு
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு